# ஆற்றுப்படை நூல்களில் வாழ்வியல் காணலாகும் கூறுகள்

30

**ச.பெருமாள்**

**இளங்கலை தமிழ்**

**காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி**

**ஆய்வுச்சுருக்கம் :**

பத்துப்பட்டு நூல்களுள் புறம்பாடும் நூல்கள் ஆறு அவற்றுள் ஆற்றுப்படை நூல்கள் ஐந்து இரவலனை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படை நூலாகும். இந்நூலில் பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியல் கூறுகள், அரசர்களின் ஆட்சி செம்மை போன்றவற்றை இந்த ஆய்வு கட்டுரையில் காணலாம்.

**ஆய்வின் நோக்கம்** :

பண்டைய கால மக்களின் வாழ்வியல் பண்பாட்டு கூறுகள், அரசர்கள், வள்ளலின் தனிச்சிறப்புகள், தமிழின் தொன்மை சிறப்புகள் போன்றவற்றை ஆய்வதே "ஆற்றுப்படை நூல்களில் காணலாகும் கூறுகள்" எனும் ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஆற்றுப்படைகள்ஐந்துஅவை,திருமுருகாற்றுப்படை,பொருணராற்றுப்படை,சிறுபாணாற்றுப்படை,பெரும்பாணாற்றுப்படை,கூத்தாராற்றுப்படை ஆகும். பொருள் நலம் இல்லாக் கற்பனைகளோ பொருத்தம் அற்ற உவமைகளோ இந்நூலில் இல்லை.பண்டைத் தமிழ் மக்களின் வாழ்கைச் சிறப்பையும், அரசர்களின் ஆட்சிச் செம்மையையும் தெளிவாக காணலாம்.

**ஆற்றுப்படைகள்** :

பரிசு பெற்ற ஒருவன் பரிசு பெற விரும்பும் மற்றொருவனை வள்ளல் ஒருவனிடம் ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படை ஆகும். வழிப்படுத்தப்படுவர் பெயரால் அமையாமல், பாட்டுடைத் தலைவர் பெயரால் நூற் பெயர் அமைந்திருப்பதும் இதன் தனிச்சிறப்பாகும். சங்க காலச் சமயநெறியைப் புலப்படுத்தும் இப்பாடல் 11ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. பெறலரும் பரிசில் வீடு பேறே என்பது செவ்விதின் புலப்படுத்தப்பட்டுள்ளது.ஆறுபடை வீடுகள் முன்னியது முடிக்கும் முருகப்பெருமானின் அழகு, ஆற்றல், அரும் செயல்கள், வழிபடும் முனிவர், அந்தணர், குறமகளிர் முதலியோர் செயல்கள், திருவிழாக்கள் - சடங்குகள் முதலியவற்றை நன்கு விளக்கியுள்ளது.

**உலகம் உலப்ப வலன் எர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு**
**ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி**
**திருமுருகாற்றுப்படை**

சீறியாழ் வாசிப்பவன் ஆகையாலும் அடிஅளவிற் சிறியதாகையாலும் நூல், சிறுபாணாற்றுப்படை எனப் பெயர் பெற்றது.இதனை வரலாற்றுப் படை என்றே கூறிவிடலாம்.சேரன் இமயத்தில் விற்பொரித்த சிறப்பு. சோழன் தூங்கெயில் எறிந்த தன்மை.பாண்டியன் தமிழ்காத்த முறை குறிப்பிடப்பட்டுள்ளது.கடையேழு வள்ளல்கள் கொடை மடம் விளக்கப்பட்டு இவ்வெழுவரின்

வள்ளன்மையும் ஒருசேரப் பெற்றவன் நல்லியகோடன் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.இயற்கை வருணனை அமைந்த பகுதிகள் ஆசிரியரின் அழகுணர்வை மெய்ப்பிக் கின்றன. பாணனின் மணைவி குப்பையில் விளைந்த வேளைக்கீரையை உப்பின்றி வேகவைத்து வாயிற்கதவை அடைத்து சுற்றத்தோடு உண்ணும் வறுமைக்காட்சி நெஞ்சை நெகிழ்த்தும் சோகச்சித்திரமாகும்.

**பெரும்பாணாற்றுப்படை**:

தொண்டைமான் இளந்திரயனை கண்டியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது.500 அடிகளை கொண்டது.பேரியாழ் வாசிக்கும் பாணனை ஆற்றுப்படுத்துவதாலும், அடி அளவு மிகுந்தமையாலும் பெரும்பாணாற்றுப்படை ஆயிற்று. பாணாறு என்ற வேறு பெயரும் உண்டு.இந்திணை வருணனைகள், அங்கு வாழும் மக்களின் விருந்தோம்பற் சிறப்பு, உணவு முறை எனச் சித்திரிக்கிறது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறிஇச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்**

**(தொல்காப்பியம், புறத்திணையியல் 29)**

பெரும்பாண், பெரிய பாண் எனப் பொருள்படும். பெரிய பாணாவது, பெரும் பண். அஃதாவது பெரிய பாட்டு. அக்காலத்துப் பாட்டுக்களைப் பாடுவதற்கெனத் தனி வகுப்பினராய்ச் சிலர் பிரிந்திருந்தனர். அவருள் பெரிய யாழைத் தாங்கி அதன் நரம்புகளை வலித்து அதன் இசையோடு ஒன்ற இனிது பாடுவோரே பெரும்பாணர் ஆவர் . பாணரை அவர் பண்பால் பாண் என்றுக் கொண்டு அவரை ஆற்றுப்படுத்தியதால் பெரும்பாணாற்றுப்படை எனப் பெயர் அமைத்தனர்.

**பொருநாராற்றுப்படை**:

சோழன் கரிகாற் பெறுவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது.248 அடிகளைக் கொண்டது. பரிசில் பெற்ற பொறுநன் பரிசில் பெற விரும்பும் பொறுநனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது.ஒருவரைப்போல வேடமிட்டு பாடுவர் பொறுநர் எனப்படுவர்.கரிகாலனின் கொடைச் சிறப்பையும், வீரச் சிறப்பையும் விளக்கி கூறுகிறது. பாம்பு தோல் போல மெல்லிய வழவழப்பான துணிகளில் நெய்யும் தமிழரின் நெசவுத்திறனைச் சுட்டுகிறது.பாலையாற்றின் வடிவம், அதன் இசைச் சிறப்பு, பாடினியின் அழகு நலம், அரசனின் விருந்தோம்பல்,கரிகாலனின் வெண்ணிப்போர் வெற்றி, நீதி வழங்கும் திறன் ஆகியன புனையப்பட்டுள்ளன.ஆரலைக் கள்வர்களையும் படை இழக்கச் செய்யும் இசைக் கலையின் சிறப்பு நன்கு தீட்டப்பட்டுள்ளது.கலைஞர்கள் பரிசில் பெற்று திரும்பும்போது ஏழிசையையும் போற்றும் வகையில் ஏழடி நடந்து சென்று அரசர்கள் வழியனுப்புவார்கள் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

**சிறுபாணாற்றுப்படை** :

ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது.

269 அடிகளைக் கொண்டது. பரிசில் பெற்ற பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. இப்பாணன் அரசனின் ஆட்சி சிறப்பு , கொடைத்திறம் . உப்பு வணிகர் வாழ்வு, பேரியாழ் அமைப்பு, பண்அமைதி நாட்டுப் பெரு வழிகள் முதலியன புலப்படுத்தப்பட்டுள்ளன.பொன்னைக் கல்லில் உரைத்து மாற்றுப் பார்த்தல், நெல்லரிசியால் மதுபானம் செய்தல், சுங்கவரி அளித்தல் வணிக மகளிர் உப்பு வண்டிகளை ஓட்டிச் செல்லுதல், வணிகர் மிளகுப் பொதியினை கழுதை மேல் ஏற்றிச் செல்லல்,போன்ற செய்திகளையும் அறிய முடிகிறது.

**மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை :**

நன்னன்சேய்நன்னனைப்பெருங்குன்றூர்க்கௌசிகனார் பாடியது.583 அடிகளைக் கொண்டது. பரிசில் பெற்ற கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. இதனால் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கப்படும். மலையை யானையாக உருவகித்து அதன் மதநீர் ஓசையை கடாம் என்று சிறப்பித்ததனால் இந்நூல் 'மலைபடுகடாம்' எனப்பட்டது.கடுக் கலித்து எழுந்த கண்அகன் சிலம்பில் , படுத்து வைத்தன்ன பாறை மருங்கின் , 15எடுத்து நிறுத்தன்ன இட்டு அருஞ்சிறுநெறி,தொடுத்தவாளியர்துணைபுணர்கானவர் இடுக்கண் செய்யாது இயங்குநர் இயக்கும் , அடுக்கல் மீமிசை அருப்பம் பேணாது, இடிச்சுர நிவப்பின் இயவுக் கொண்டு ஒழுகித் (14 – 20)
பேரியாழின் வர்ணனை, நன்னனின் பண்பு நலன் ஆகியவை சொல்லப்படுகின்றன. நன்னனின் சிறப்பு, மலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களின் பண்பு, விருந்தோம்பற் சிறப்பு, மலை வழிகள் குறித்த வருணனைகள் , மலையில் எழும் பல்வகை ஓசைகள், அரிய வழிகளில் செல்லும் முறை, நன்னனின் கொடை சிறப்பு, ஆகியன கூறப்பட்டுள்ளன.

**முடிவுரை**

மலையில் கேட்கும் 20 வகை ஓசைகளை 56 அடிகளில் தொகுத்துக் கூறியுள்ளார். குறவர்கள் புண்ணாற்படும் வருத்தத்தைக் குறமகளிர் பாடல் பாடித் தணித்தனர். பாகர் யானையை பழக்க அவற்றுக்கு வடமொழி பயிற்றினர் போன்ற அரிய செய்திகளையும் இந்நூலால் அறிகிறோம்.

நூல்கள்

ஆற்றுப்படை மதிப்பீட்டு நூல்கள்
குறிஞ்சி (தொ.ஆ)
மலர் பதிப்பகம்